முருகப்பெருமான் துணை

**மகான் சட்டநாதர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.11.2022**, திங்கட்கிழமை

1. தவராஜனே தருமனே அரங்கா
தவபலமிக்க தொண்டர்படைகளை
அவனியெங்கிலும் நிறுவ வேண்டி
அவதாரம் எடுத்த ஞான தேசிகா
2. தேசகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் சுபகிருது துலைதிங்கள்
ஆசிபட மூவேழுதிகதி சோம வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் **21** ம் நாள் **07.11.2022**, திங்கட்கிழமை)
அறிவிப்பேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை சட்டநாதர் யானும்
அருளுவேன் உலகநலம் பெற
ஆசிதந்து மக்களை மீட்க
ஆன்மீகம் வளர்க்கும் ஞானி
4. ஞானியரின் சன்மார்க்க வழியே
நம்பிக்கை தரும் வழியாகும்
ஞானியர்கள் மேலான பூசை
நம்பகமுற மக்கள் நாளும் செய்து
5. செய்துமே முடிந்த வகை தருமம்
சேவையாகத் தொடர்ந்து செய்ய
அய்யம் அனைத்தும் விலகி
ஆற்றல் பெருகும் தெளிவுபட
6. தெளிவுபட சகல முடிவுகளும்
திடமாய் கண்டு வெற்றியும்
அழியாமை பெற உண்டான
அடுத்தப் படிநிலை உயரும்
7. உயரவே உள்ளும் புறமும்
ஒருபோதும் எதிர்வினை பற்றா
தயவான வாழ்வாக மாற்றம்
தவசி அரங்கன் ஆசிபட காணும்
8. காணவே எந்தச் சூழலிலும்
கட்டுப்பாடு விலகா காப்பு
ஞானமாக சேவையாகவே மாறி
நற்பேரு வளர்ச்சி நிலைகூடும்
9. கூடவே ஞானிகள் துணையாக
குருவரங்கன் ஆசி வழியில்
ஈடேறும் தருமவான் ஞானவான்
எனும் அற்புத நிலை கூடி

10. கூடியே உலகையே மாற்றும்
கும்பமுனி முருகப்பெருமானார்
நாடியேதுணை இருக்கும் வண்ணம்
ஞான சபையாக உலகம் கண்டு

11. கண்டுமே ஞானத்தலைமையும்
கலிஇடர் வெல்லும் ஞான ஆட்சியும்
உண்டாகும் சடுதி பேருலகில்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

—சுபம்—